2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 28.02.2019

## 28.02.2019ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

| வ.எண் | பொருள்கள் – பிப்ரவரி 2019 | தீர்மானம் எண் |
|---|---|---|
| 1. | கும்பகோணம் நகராட்சியின் 2018–19ம் நிதியாண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2019–20ம் நிதியாண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு கீழ்கண்ட நிதிகளுக்கு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.<br>1. வருவாய் நிதி (ம) மூலதனநிதி<br>2. குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால்நிதி<br>3. கல்விநிதி | **தீர்மான எண்.276**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 2. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனங்களுக்கான 2019–2020ம் நிதியாண்டில் சாலைவரி, வாகனவரி காப்பீடு செலுத்துவதற்கும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் (பத்து இலட்சம் மட்டும்) அனுமதி வேண்டி தனி அலுவலருக்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.277**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 3. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பொதுசுகாதாரப்பணிக்களுக்கான கிருமி நாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் தேவையான இருப்பு இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி மாசிமகம் தீர்த்தவாரி பெருவிழாவை முன்னிட்டும், அரசு நிர்ணயித்த விலை விகிதத்தில், அரசு அங்கீகார நிறுவனமான Tansidco-Ltd., தஞ்சாவூர் நிறுவனத்தாரிடம் நீர்த்த சுண்ணாம்பு 8000கிலோவும், பிளீச்சிங் பவுடர்–5000 கிலோவும் கொள்முதல் செய்யவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.3.00 (மூன்று இலட்சம் மட்டும்) தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.278**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 4. | இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு குடிநீரில் கிருமி நாசினியாக பயன்படுத்தப்படும் Sodium Hypo Clorineன் திரவம் தற்பொழுது சப்ளை செய்துவரும் M/s.கிருஷ்ணா கெமிக்கல்ஸ், தஞ்சாவூர் நிறுவனத்திடம் இருந்து அதே விலை விகிதத்தில் லிட்டர் ரூ.9.00 வீதம் 10,000 லிட்டர் வாங்குவதற்கு செலவினம் ரூ.90,000/–க்கு மன்ற அனுமதிக்கு. | **தீர்மான எண்.279**<br>அனுமதி வழங்கப்பட்டது. |
| 5. | இந்நகராட்சியின் கரிக்குளத்தில் IHSDP திட்டத்தின்கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு புதிய மின் இணைப்பு பெற மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விண்ணபிக்கப்பட்டு கேட்பு ரூ.72,505 வரப்பெற்றுள்ளது. தொகை செலுத்த அனுமதிக்கு. | **தீர்மான எண்.280**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 6. | இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையங்கள் குடிதாங்கி New Well மற்றும் வலையப்பேட்டை நீர்உந்து நிலையங்களுக்கு மின் ஆய்வு கட்டணமாக மின்ஆய்வாளர் அலுவலகத்திற்கு செலுத்த ரூ.3700/– (ரூபாய் மூன்று ஆயிரத்து எழுநூறு மட்டும்) செலுத்த அனுமதிக்கு. | **தீர்மான எண்.281**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 7. | இந்நகராட்சியின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், கரிக்குளம் உயர்மின் அழுத்தம் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. H.T SC No.97 இவற்றில் உள்ள மின் கருவிகளை ஒவ்வொரு ஆண்டும் மின் ஆய்வாளர் ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆய்வு செய்ய ஆய்வு கட்டணம் ரூ.4,000/– செலுத்த மன்ற அனுமதிக்கு. | **தீர்மான எண்.282**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 8. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 191 மற்றும் 303–ன் கீழ் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் கட்டிட விதிகள் 1971 மற்றும் பயன்பாட்டில் இருக்கும் அனைத்து திட்ட மற்றும் கட்டிட விதிகளை ஒருங்கிணைத்து தற்போது புதியதாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 – தயார் செய்யப்பட்டு அரசாணை எண்.18 நகாட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய அரசாணை தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a)–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் –2019–ன் அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019–னை கும்பகோணம் நகராட்சி பகுதிகளில் நடைமுறை படுத்தும் வகையில் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும். | **தீர்மான எண்.283**<br>பதிவு செய்யப்பட்டது. |
| 9. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 191 மற்றும் 303–ன் கீழ் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் கட்டிட விதிகள் | **தீர்மான எண்.284**<br>அனுமதி |

| | | |
|---|---|---|
| | 1971 மற்றும் பயன்பாட்டில் இருக்கும் அனைத்து திட்ட மற்றும் கட்டிட விதிகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 – தயார் செய்யப்பட்டு அரசாணை எண்.18 நகாட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய அரசாணை தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a) நாள்.04.02.2019–ல் நடைமுறைப்படுத்த பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 – நடைமுறைப்படுத்துதல் விதி 30(1) மற்றும் 30(2)–ல் தெரிவித்துள்ளபடி கும்பகோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building area) (CBA) மற்றும் பொருளாதாரத்தில் நெலிவடைந்தோர் வசிக்கும் பகுதி (Economically weaker section area (E.W.S) ஆகியவற்றினை கண்டறிந்து நகர் மன்றத்தின் அனுமதி பெற்று நகர் (ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு (08.03.2019)–ம் தேதிக்குள் அனுப்பிட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.31159/2018/டி3, நாள்.05.03.2019–ம் தேதிய சுற்றிறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கையின்படி கும்பகோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பட்டியல் 1–ல் உள்ளவாறு தொடர் கட்டுமான பகுதிகள் (CBA) பட்டியல் 1 மற்றும் நகர்ப்புற மனித வளம் மற்றும் மதிப்பீடு 2010 ஆம் ஆண்டு புள்ளி விபர கணக்கெடுப்பு (Urban Statistions for human resource and assessment) திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு 60 குடிசைப்பகுதிகளை பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி என அறிவிக்கை செய்யும் பொருட்டு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கு உத்தேசங்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு. | அளிக்கப்பட்டது. |
| 10. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 191 மற்றும் 303–ன் கீழ் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் கட்டிட விதிகள் 1971 மற்றும் பயன்பாட்டில் இருக்கும் அனைத்து திட்ட மற்றும் கட்டிட விதிகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 – தயார் செய்யப்பட்டு அரசாணை எண்.18 நகாட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய அரசாணை தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a)–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள கட்டண விகிதங்கள் நகர்மன்ற தீர்மானம் எண்.209, நாள்.29.07.2013–ன் படி கட்டிட உரிமம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டும் அதன் கட்டிட உரிமத்தை புதுப்பித்து வழங்கப்படாமலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி 14(1) கட்டிட உரிமை ஆணைக்காலம் 5 ஆண்டுகள் எனவும், கட்டிட உரிமத்தை ஒருமுறை 3 ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு புதுப்பித்து வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்விதிகளின்படி கட்டிட உரிமைக்காலத்தை 5 ஆண்டுகள் என மாற்றியமைத்தும், ஒருமுறை 3 ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு புதுப்பித்து வழங்கவும், திருத்தப்படும் உரிமைக்காலத்திற்கேற்றவாறு கீழ்க்கண்டவாறு உரிமைக் கட்டணங்களை திருத்தி அமைக்கலாம். திருத்தியமைக்கப்படும் கட்டண விகிதங்களை 01.06.2019–ல் நடை முறைப்படுத்தவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.285** ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

| **வ. எண்** | **தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு** | **குடியிருப்பு கட்டிடங்களுக்கு** | **தற்போது கட்டண விகிதம்** | | | **திருத்திய கட்டண விகிதம்** | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **அளவு** | **காலம்** | **கட்டண விகிதம்** | **அளவு** | **காலம்** | **கட்டண விகிதம்** |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | 197 | செல்லார் மற்றும் செமி பேஃஸ்மெண்ட் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 250.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 350.00 |
| 2 | | தரை தளம் | ஒவ்வொ | 3 | 250.00 | ஒவ்வெ | 5 | 420.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | ஆண்டுகளுக்கு | | ாரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | ஆண்டுகளுக்கு | |
| 3 | | முதல் தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 300.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 500.00 |
| 4 | | இரண்டாம் தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 350.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 600.00 |
| 5 | | மூன்றாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 400.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 670.00 |
| | | **குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு** | | | | | | |
| 6 | | செல்லார் மற்றும் செமி பேஸ்மெண்ட் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 400.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 670.00 |
| 7 | | தரை தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 400.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 670.00 |
| 8 | | முதல் தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 500.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 850.00 |
| 9 | | இரண்டாம் தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டுகளுக்கு | 500.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகளுக்கு | 850.00 |
| 10 | | மூன்றாம் தளம் மற்றும் | ஒவ்வொரு 10 | 3 ஆண் | 600.00 | ஒவ்வொரு 10 | 5 ஆண் | 1000.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அதற்கு மேல் உள்ள தளங்கள் | சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | டு களுக்கு | | சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | டு களுக்கு | |
| 11 | | தொழிற்சாலை கட்டிடங்களுக்கு | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டு களுக்கு | 750.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டு களுக்கு | 1250.00 |
| 12 | | ஓட்டுக்கட்டிடம் (Tiled) ஏ.சி.சீட் மற்றும் பைபர், தகரம் அமைத்து கட்டிடம் கட்டுதல் மாற்றம் செய்து கட்டுதல் | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டு களுக்கு | 200.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டு களுக்கு | 340.00 |
| | | **கட்டிடங்கள் கட்ட மனையை அங்கீரிக்க** | | | | | | |
| 13 | 198 | மனை ஒன்றுக்கு மனையின் பரப்பு 300 ச.மீ பரப்பு வரை | | 3 ஆண்டு களுக்கு | 200.00 | | 5 ஆண்டு களுக்கு | 340.00 |
| 14 | | மனை ஒன்றுக்கு மனையின் பர.பு 300 ச.மீ மேல் | | 3 ஆண்டு களுக்கு | 300.0 | | 5 ஆண்டு களுக்கு | 500.00 |
| 15 | | கூடுதல் கழிவறை | ஒன்றுக்கு | 3 ஆண்டு களுக்கு | 100.00 | ஒன்றுக்கு | 5 ஆண்டு களுக்கு | 175.00 |
| 16 | | கூடுதல் குளியலறை | ஒன்றுக்கு | 3 ஆண்டு களுக்கு | 100.00 | ஒன்றுக்கு | 5 ஆண்டு களுக்கு | 175.00 |
| 17 | | கூடுதல் கழிவறையுடன் (கூடிய குளியல் அறை (டாய்லெட்) | ஒன்றுக்கு | 3 ஆண்டு களுக்கு | 200.00 | ஒன்றுக்கு | 5 ஆண்டு களுக்கு | 350.00 |
| 18 | | நச்சித்தொட்டி | ஒன்றுக்கு | 3 ஆண்டு களுக்கு | 200.00 | ஒன்றுக்கு | 5 ஆண்டு களுக்கு | 350.00 |
| 19 | | சுற்றுச்சுவர் சாலையை ஒட்டி 1.5 மீட்டருக்கு | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 3 ஆண்டு களுக்கு | 200.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர்க்கும் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டு களுக்கு | 350.00 |
| 20 | 204 | ஒருமுறை 3 | | | | | 3 | உரிமை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டுகளு க்கு புதுப்பித்து வழங்க | | | | | ஆண் டு களுக் கு | க் கட்டண த்தில் 50 % |

**11.** இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையங்களில் MCCR. Capacitor மற்றும் Starter Service செய்யும் பணிக்கு 30.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரு நிறுவனங்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | குறிப்பிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. ராஜூ எலக்ட்ரிக்கல்ஸ்,<br>18, சாரங்கபாணி கீழவீதி.<br>கும்பகோணம் | 1,95,820<br>-0.12 less |
| 2 | M/s.Ramu Electrical & General Engineering Works<br>உப்புக்காரத்தெரு,<br>கும்பகோணம் | 1,98,130<br>+ 1.06 above |

**தீர்மான எண்.286**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

**12.** இந்நகராட்சியில் புதைசாக்கடை இணைப்பு பெற்ற இவ்வினங்களில் புதைசாக்கடை வரிகேட்பில் வார்டு எண் மற்றும் தெருவின் பெயர் திருத்தம் செய்ய பழையவரி கேட்பினை ரத்து செய்துவிட்டு அதே கேட்பிலேயே புதிதாக பதிவேற்றம் செய்யவும், மேலும் சொத்துவரி பழைய வரிவிதிப்பு எண்ணிலிருந்து புதிய வரிவிதிப்பு எண்ணிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதை போல் புதைசாக்கடை வரியையும் பழைய வரிவிதிப்பு எண்ணிலிருந்து புதிய வரிவிதிப்பு எண்ணாக மாற்றம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | தற்போது உள்ள வார்டு எண் | தெருவின் யெர் | மாற்றம் செய்ய வேண்டிய வார்டு எண் | தெருவின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | கே.எம்.சந்திரா<br>வ.வி.எண்.105/20317 | 22 | கர்ணகொல்லை தெரு | 20 | கர்ணகொல்லை தெற்கு தெரு |
| 2 | டி.ருக்மணி<br>வ.வி.எண்.105/6408 | 7 | பெரியதம்பி விரிவாக்கம் | 8 | பக்தபுரி தெரு |

| வ. எண் | வார்டு | வரிவிதிப்பு எண் | பெயர் | முகவரி | திருத்தம் செய்ய வேண்டியது |
|---|---|---|---|---|---|
| 1 | 42 | 105/042/0070 | என்.எஸ்.ரவி | 29/654 காசி விஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம் | வ.விதி.எண்.105/39161 யினை ரத்து செய்யவும் 105/042/0070ல் கேட்பை எழுப்பவும். |

**தீர்மான எண்.287**
அனுமதி அளிக்கப்பட்டது.

**13.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திருவள்ளுவர் நகர் முதல் மற்றும் இரண்டாம் தெரு பூங்காக்கள் மற்றும் பாலக்கரை பகுதியில் உள்ள குழந்தைகள் நினைவகப் பூங்கா ஆகியவற்றில் குப்பை உரமாக்கும் தொட்டி அமைக்கும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**தீர்மான எண்.288**
அனுமதி அளிக்கப்பட்டது.

**14.** கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 38 சத்யம் நகர், குமரன் தெரு மற்றும் அரசலாறு லயன் கரை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து உரமாக்க உரிய தண்ணீர் வசதியுடன் சத்யம் நகர் பூங்காவில் குப்பைகள்

**தீர்மான எண்.289**
ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | உருவாக்கும் இடத்திலேயே உரமாக்குதல் மையம் அமைத்தல் மற்றும் சத்யம் நகர் பூங்கா சுற்றுச் சுவரின் மீது கம்பி வேலி அமைத்து உயர்த்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.1,90,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | |
| 15. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 44 முத்துக்கிருஷ்ணன் நகர் மற்றும் துரை நகர் சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து முத்துக்கிருஷ்ணன் நகர் பூங்காவில் குப்பைகள் உருவாக்கும் இடத்திலேயே உரமாக்குதல் மையம்தினை உரிய தண்ணீர் வசதியுடன் அமைக்கும் பணிக்கு ரூ.90,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.290** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 16. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 45 ஸ்ரீநிவாசன் நகர் பூங்காவை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து உரமாக்க ஸ்ரீநிவாசன் நகர் பூங்காவில் குப்பைகள் உருவாக்கும் இடத்திலேயே உரமாக்குதல் மையம் அமைக்கும் பணிக்கு ரூ.96,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.291** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 17. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 45 இளங்கா நகர் பூங்காவில் குழந்தைகள் விளையாட்டு கருவிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, பசுமையான புல்தரை வசதி, அமரும் இருக்கைகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.2,70,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.292** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 18. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 25 ஸ்ரீராம் நகர் பூங்காவிற்கு மின் விளக்குகளுக்கான கேபிள், மரம் செடி நடுதல், தண்ணீர் பைப் லைன், வர்ணம் பூசுதல், அமரும் இருக்கைகள், பூங்காவினை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து உரமாக்க குப்பைகள் உருவாக்கும் இடத்திலேயே உரமாக்குதல் மையம் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.5,20,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.293** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 19. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 25 இராகவேந்திரா நகர் பூங்காவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, சி.சி. டி.வி., கண்காணிப்பு கேமரா வசதி, மரம் செடி நடுதல், மின் விளக்கு வசதி, குழந்தைகள் விளையாட்டு கருவிகள், வர்ணம் பூசுதல், பூங்காவினை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து உரமாக்க குப்பைகள் உருவாக்கும் இடத்திலேயே உரமாக்குதல் மையம் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.9,00,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.294** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 20. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 40 டாக்டர் தியாகராஜன் பூங்காவினை பூங்காவினை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து உரமாக்க குப்பைகள் உருவாக்கும் இடத்திலேயே உரமாக்குதல் மையம் அமைத்தல் மற்றும் பூங்கா வளாகத்தில் உடற்பயிற்சி உபகரணங்கள் பொருத்துல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.4,00,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.295** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 21. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 44 கம்பன் நகர் பகுதி நகராட்சி சுகாதார வளாகத்தில் உள்ள கழிப்பிடம் மற்றும் குளியலறைகள் பழுதடைந்து போதிய தண்ணீர் மற்றும் மின் வசதிகளின்றி பொதுமக்கள் உபயோகப்படுத்த சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, இக்கழிப்பிடத்தில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ரூ. 3,00,000/— மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் | **தீர்மான எண்.296** ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஒப்புதலுக்கு. | |
| 22. | கும்பகோணம் நகராட்சி கும்பேஸ்வரன் தெற்கு தஞ்சாவூர் சாலை A.S.O. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலரின் கோரிக்கைப்படி வெளி நோயாளிகள் உபயோகத்திற்கென கழிப்பிட வசதி, காத்திருக்கும் பகுதியில் நிழலுக்கென மேற்கூரை, உள் அறைகளில் கூடுதல் மின் வசதி பணிகள் மேற்கொள்ளவும், இராமசாமி கோயில் சாலையில் இயங்கி வரும் நகராட்சி வரி வசூல் மையத்தில் மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 1,25,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.297** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 23. | கும்பகோணம் நகராட்சி கும்பேஸ்வரன் தெற்கு தஞ்சாவூர் சாலையில் இயங்கி வரும் அம்மா உணவகத்தின் பிரதான நுழைவாயிலுள்ள இரும்பு கேட் பழுதடைந்துள்ளதால் பணியாற்றும் பணியாளர்கள் திறந்து மூட மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். அம்மா உணவகத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் அலுமினியம் மற்றும் கண்ணாடி சட்டர்களுடன் உள்ள கதவுகள் போதிய பாதுகாப்பின்மையால் இரும்பு கதவுகள் அமைத்து தருமாறு அம்மா உணவகத்தின் பணியாட்கள் கோரிக்கை கடிதம் அளித்துள்ளனர். ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி இரும்பு கேட் பழுதுபார்க்க மற்றும் இரண்டு புதிய கதவுகள் அமைக்க மதிப்பீடு ரூ. 50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.298** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 24. | கும்பகோணம் நகராட்சி தாரதசுரம் அறிஞர் அண்ணா தினசரி மார்கெட் வளாக மார்கெட் ஒப்பந்ததாரர்கள் மற்றும் வணிகர்கள் தற்பொழுதுள்ள கழிப்பிடம் போதுமானதாக இல்லையென்றும் கூடுதலாக சிறுநீர் கழிப்பிட வசதி செய்து தருமாறு ஆணையர் அவர்களிடம் கோரியுள்ளனர். அதன்படி புதிய சிறுநீர் கழிப்பிட கட்டமைப்பு வசதி அமைக்க ரூ. 3,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.299** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 25. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 7 பகுதியில் தானியங்கும் குடிநீர் மையம் அமைக்கப்படவுள்ளதற்கு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு ரூ. 1,60,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.300** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 26. | கும்பகோணம் நகராட்சி மாசிமக பெருவிழா 19.02.2019 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு நகரில் உள்ள சைவ மற்றும் வைணவ கோயில்களில் நடைபெறும் தேரோட்டங்கள் மற்றும் மகாமகம் குளத்தில் நடைபெறும் தீர்த்தவாரி ஆகியவைகளை சிறப்புடன் மேற்கொள்வது குறித்து வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் 16.02.2019 அன்று ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற்றது. நகராட்சியால் டாக்டர் தியாகராஜன் பூங்காவில் ஆண்கள் பெண்களுக்கென தனித்தனியாக தற்காலிக உடை மாற்றும் அறை வசதியும், நகரில் முக்கியமான 7 இடங்களில் குடி தண்ணீர் வசதியும் அமைக்குமாறு வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதற்கான மதிப்பீடு ரூ. 23,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.301** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 27. | இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் நான்கு பகுதிகளில், சுற்றியுள்ள வார்டுகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சேகரித்து உரமாக்க உரிய தண்ணீர் வசதியுடன் On Site Compost Centre அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.<br>1. இந்திராகாந்தி சாலை சுகாதாரப்பிரிவு அலுவலக வளாகம், வார்டு 41<br>2. மாதளம்பேட்டை பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன் வளாகம், வார்டு 43<br>3. மாரியம்மன் கோயில் சாலை சுடுகாடு வளாகம், வார்டு 44<br>4. ஸ்ரீநிவாசன் நகர் பாதாள சாக்கடை லிப்டிங் ஸ்டேசன் வளாகம், வார்டு 45<br>இதற்கான மதிப்பீடு ரூ.6,50,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>இப்பணியினை நகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.302** ஒப்புதல் வழங்கப்பட்டது. |

<table>
<tr><td>28.</td><td>கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கி முதன்மை திட்ட அலுவலர் அவர்களின் 8.1.2019–ம் தேதிய எண்.C.O/CSR/48/2018-19 கடிதத்தில் இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பெருமாண்டி எரிவாயு தகன மேடையில் LPG Burner System அமைக்கும் பணியினை Chennai. Essco Furnaces Pvt. Ltd. நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ள சிட்டி யூனியன் வங்கி CSR நிதியிலிருந்து ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எரிவாயு தகன மேடையினை LPG Burner System மூலம் இயக்குவதற்கு 10 எண்ணிக்கை LPG Gas Cylinder இணைப்புகள் வழங்கவும், அதற்கான சிலிண்டர்கள் சப்ளை செய்யவும் ஆடுதுறை, சுமங்கலி எச்.பி. கேஸ் ஏஜென்சி நிறுவனத்தாரை கோரவும், இதற்காக முதற்கட்டமாக செலுத்த வேண்டிய 10 எண்ணிக்கை சிலிண்டர்களுக்கு டெபாசிட் தொகை ரூ.17,000 மற்றும் 10 எண்ணிக்கை சிலிண்டர் கட்டணத் தொகை ரூ.13000/– ஆகக் கூடுதல் ரூ.30000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு</td><td>தீர்மான எண்.303<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>29.</td><td>இந்நகராட்சியின் கரிக்குளம் குப்பை கிடங்கில் சுமார் 20 வருடங்களாக சேகரிக்கப்பட்ட குப்பைகளை தூய்மை இந்தியா திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு 9 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது. இவ்விடத்தில் ஒரு பூங்கா அமைத்திட கட்டிட எழில் கலைஞரை நியமனம் செய்து திட்ட அறிக்கைபெற 18.02.2019ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>குறிப்பிடப்பட்ட தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>My Nor Enterprises Pvt., Ltd.,<br>20, Perumal Street,<br>Nagapattinam</td><td>5,00,000/–</td></tr>
<tr><td>2</td><td>R. K. Constructions,<br>4/36, Main Road,<br>Thiruvidaimarudur.</td><td>5,60,000/–</td></tr>
<tr><td>3</td><td>M/s. D MAC Group,<br>Chennai Road,<br>Kumbakonam.</td><td>4,96,780</td></tr>
</table></td><td>தீர்மான எண்.304<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>30.</td><td>கும்பகோணம் நகராட்சியில் ரூ.107.31 கோடி மதிப்பீட்டிலான திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் செயல்படுத்த நான்கு உதவிப்பொறியாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு பணியை மேற்பார்வையிட தகுதி வாய்ந்த தொழில்நுட்ப உதவியாளர் Grade-III ஒருவரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் 5391/2005/பி3 நாள்.28.01.2006ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி Outsourcing முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி அமர்த்திக்கொள்ளப்பட்டதில் 28.03.2019ல் தொழில் நுட்ப உதவியாளர் பணிக்காலம் முடிவடைவதால் மேலும் 29.03.2019 முதல் ஒருவருட காலத்திற்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. இதற்கான உத்தேச செலவினம் ரூ.1,80,000/– மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.305<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>31.</td><td>இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் வாசக சாலைகளுக்கும், நகராட்சி அலுவலகம் (ஆணையர் அறை, தணிக்கை துறை) மற்றும் ஆணையர் இல்லம் ஆகிய இடங்களில் தினசரி செய்தித்தாள்கள் நியூஸ் ஏஜெண்ட் திரு.பி.மோகன் என்பவரால் விநியோகம் செய்யப்பட்டு 2017ம் ஆண்டு வரை தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 2018ம் ஆண்டு தினசரி செய்தித்தாள்கள் விநியோகம் செய்யப்பட்டு அதற்கான தொகை வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டுக்கான தொகை வழங்க ரூ.1,10,000/–க்கு உத்தேச செலவினமாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.306<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>32.</td><td>அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.26.07.2018ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள உள்ளதால் சொத்துவரி நிர்ணயம் செய்வது தொடர்பாக தினசரி நாளிதழில் தஞ்சாவூர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வழியாக பிரசுரம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.307<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>33.</td><td>தூய்மை இந்தியா குழுமம் 2018–19 ன்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு</td><td>தீர்மான எண்.308</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை கடிதம் ந.க. எண் 22866/ப்பி3/2018, நாள் 23.08.2018–ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதன்படி, வார்டு எண்.7, பெரிய தம்பி நகரில் 3 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு ரூ.52.00 இலட்சம் ஆகும். இதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 24.9.2018–ம் தேதிய ந.க.எண்.38984/2014/P1 கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற இத்திட்டத்திற்கான 13.8.2018 அன்று அரசு முதன்மைச் செயலர் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களது தலைமையில் 7வது உயர்மட்ட குழு கூட்ட நிகழ்ச்சி குறிப்புகளின்படி இப்பணிக்கான திருத்திய திட்டநிதி ஒதுக்கீடு ரூ.52.00 இலட்சத்திலிருந்து ரூ.5.00 இலட்சம் குறைத்து ரூ.47.00 இலட்சத்திற்கு தற்பொழுது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஏற்கனவே 12.9.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்ததபுள்ளிதாரர் திரு.எம்.ராஜேந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.51,72,450.95 நகர் மன்ற தீர்மானம் எண்.174 நாள் 27.9.2018–ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி இனத்தில் சேராத Lumpsum ,இனங்களுக்கான தொகை ரூ.2,68,940/– யையும் சேர்த்து இப்பணிக்காகும் மொத்த செலவு ரூ.54,41,390.95 ஆகும். ஆதலால் திட்ட ஒதுக்கீடு ரூ.47.00 இலட்சம் போக கூடுதலாகும் செலவினம் ரூ.7,41,390.95–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரால் இப்பணி துவங்கி மேற்கொள்ளப்படும் பொழுது சுற்றுப்பகுதியிலுள்ள பொது மக்களால் குடியிருப்பு வீடுகளுக்கு மத்தியில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் கட்டிடம் அமைப்பதற்கு கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி ஆணையர், செயற்பொறியாளர் மற்றும் நகர்நல அலுவலர் ஆகியோர்களால் நுண்ணுயிர் உரமாக்கும் செயல்முறைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டும், அப்பகுதி பொது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து பணி மேற்கொள்ள விடாமல் தடுத்து விட்டனர். எனவே பெரியதம்பி நகர் பகுதிக்குப் பதிலாக, இதே நகராட்சி அலுவலக வளாகத்தில் மேற்கு பின்புறம் உள்ள காலியிடத்தில் 3 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையக்கட்டிடத்தினை கட்டிட திருத்திய நிர்வாக அனுமதி பெறவும், இப்ணியினை ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எம்.ராஜேந்திரன் அவர்களையே பணி மேற்கொள்ள அனுமதியளிக்கவும் அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கப்பட்டது. |
| 34. | கும்பகோணம் நகராட்சியில் நடைபெற உள்ள மகாமகத்தினை முன்னிட்டு அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு செய்யப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் அறிவிப்பு எண்.139ஆக அறிவிக்கப்பட்டதன்பேரில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து 26.2.2014 அன்று அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களால் நடத்தப்பெற்ற ஆய்வு கூட்டத்தில் பாதாள சாக்கடை திட்டம் தொடர்பாக "The proposal consists of replacement of pumpsets installed in various pumping stations and does not include functioning of sewerage treatment plant. A consultant may be engaged to prepare a comprehensive detailed project report for restoration of sewerage collection system and sewage treatment plant and make them functional. This can be funded through IUDM'' என குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்து உத்தரவிடக்கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.13283/2013/இ2 நாள் 16.12.2013 மற்றும் 27.03.2014 கடிதங்களில் கோரப்பட்டதில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் 04.04.2014ம் தேதிய ந.க. எண் 28715/2011/பா.ச.தி.1 கடிதத்தில் இந்நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவும், திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யவும் தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்ட அமைப்பு | **தீர்மான எண்.309**<br>அனுமதி வழங்கப்பட்டது. |

ஏற்படுத்துவது மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகளுக்கு தேவையான விரிவான திட்ட பிரேரணை தயார் செய்ய தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்ய 09.06.2014 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பெங்களூர் InfraEn (India) Pvt., Ltd., நிறுவனத்தாருக்கு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.4.70 இலட்சத்திற்கு பணி உத்தரவு 27.06.2014 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டிருந்தன.

1. To study the existing system and check the correctness and completeness of the DPR submitted by TWAD.
2. Check the correctness and completeness of DPR prepared by TWAD for uncovered areas including designs, estimates, drawings and specifications.
3. To prepare the revised cost estimates as per the latest Schedule of rates.

இதன் அடிப்படையில் திட்ட மதிப்பீடுகள் ரூ.39.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டு டுபிட்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட விபரப்படி தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடுகளை 2018 ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு மாற்றியமைக்க வேண்டும் என 21.7.2016 அன்று நடைபெற்ற அம்ரூட் திட்டத்தின் முதல் Appraisals கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. இதனால் 2018 ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு திட்ட மதிப்பீடுகளை அனைத்தும் அம்ரூட் திட்ட வழிகாட்டுதல்களின்படி அவ்வப்போது வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கிணங்க மீள ரூ.59.84 கோடிக்கு தயார் செய்யப்பட்டு அம்ரூட் திட்ட பணிகளுக்கு அனுமதி வழங்கும் மாநில உயர் மட்ட குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 111, ந.நி(ம) கு.வ., (MC.2) துறை நாள் 25.10.2017ல் இப்பணிக்கு அம்ரூட் 2016–17 திட்டத்தின் கீழ் ரூ.59.84 கோடிக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டு, திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நகரில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்ட அமைப்புகள் ஏற்படுத்தும் ரூ.59.84 கோடி மதிப்பீட்டிலான பணிக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்தமைக்காக பெங்களூர் InfraEn (India) Pvt., Ltd., நிறுவனத்தினர் கீழ்க்கண்ட விபரப்படி ரூ.24,44,720/– பட்டியல் தொகை வழங்கக் கோரியுள்ளனர்.

| Sl.No. | Details | Amount |
|---|---|---|
| 1 | Consulting fees as per work order | 4,70,000 |
| 2 | Additional consulting fees for the complete redesign and revision of DPR (0.33% 0f 59.84 Crores) | 19,74,720 |
| | Total | 24,44,720 |

ஒப்பந்தப்புள்ளி விலை விபரப்படி ஒப்பந்த தொகை ரூ.4.70 இலட்சம் என்ற நிலையில், மேற்கண்ட காரணங்களால் விரிவான திட்ட மதிப்பீடுகள் மீள புதிதாக தயார் செய்த வகையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள மொத்த செலவினம் ரூ.24,44,720/–ஐ முழு மானியமாக இந்நகராட்சிக்கு வழங்கிட TUFIDCO A & OE நிதியின் கீழ் கோர கடிதம் அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் அவர்களின் 27.02.2019ம் தேதிய கடிதம் TUFIDCO/AMRUT/811/M(B)/2015-16ல் அம்ரூத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகளுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டமைக்கு அம்ரூட் திட்டத்தின் A & OE நிதியிலிருந்து கீழ்க்கண்ட விபரப்படி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

(Amount in Rs.)

| **Sl. No.** | **SAAP No. Year** | **Name of the Project** | **DPR preparation cost No released by TUFIDCO** |
|---|---|---|---|
| 1 | SAAP-I (2015-16) | Green Space and Parks | 197000 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>SAAP-II (2016-17)</td><td>Green Space and Parks</td><td>230000</td></tr>
<tr><td>3</td><td>SAAP-III (2017-20)</td><td>Green Space and Parks</td><td>235000</td></tr>
<tr><td>4</td><td>SAAP-II (2016-17)</td><td>Water Supply</td><td>3037000</td></tr>
<tr><td>5</td><td>SAAP-II (2016-17)</td><td>UGSS</td><td>4428000</td></tr>
<tr><td></td><td></td><td>TOTAL</td><td>8127000</td></tr>
</table>
அம்ரூட் 2016–17 திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்ட அமைப்புகள் ஏற்படுத்த ஏற்கனவே TWAD நிறுவனத்தாரால் தயார் செய்யப்பட்ட DPRயினை TUFIDCO நிறுவனத்தினர் அவ்வப்போது வழங்கிய அறிவுரைகளுக்குட்பட்டு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்தமைக்காக பெங்களூர் InfraEn (India) Pvt., Ltd., நிறுவனத்தினருக்கு பட்டியல் தொகை ரூ.24,44,720/–ஐ விடுவிக்க மன்றத்தின் அனுமதிக்கு.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>35.</td>
<td>
இந்நகராட்சி பொதுப் பிரிவு எழுத்தர்களுக்கு அலுமினியம் கேபின் தனித்தனியாக 20 எண்ணிக்கையிலும், வருவாய் அலுவலர் அறைக்கு 1 எண்ணிக்கையும், வருவாய் ஆய்வர் அறைக்கு 7 எண்ணிக்கையிலும் TWIC அலுவலகத்திற்கு அலுமினியம் partition 1 எண்ணிக்கை அமைப்பதற்கும் மற்றும் அலுவலகத்தில் உள்ள கழிவறைகளுக்கு கதவுகள் புதிதாக அமைக்கும் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள 12.2.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டின்படி ஒப்பந்தத்தொகை ரூ.</th><th>ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீத விபரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம்</td><td>593985.67</td><td>593871.00</td><td>மதிப்பீட்டை விட 0.04 சதவிகிதம் குறைவு (GST உட்பட)</td></tr>
<tr><td>2.</td><td>Ideal Engineering</td><td>593985.67</td><td>621931.18</td><td>மதிப்பீட்டை விட4.68 சதவிகிதம் அதிகம் (GST உட்பட)</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.310<br>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>36.</td>
<td>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 45 வார்டுகள் முடிய உள்ள பகுதிகளில் அனைத்து சொத்துவரி வரிவிதிப்புதாரர்களுக்கும் அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (MAIV) நாள்.19.7.2018 மற்றும் அரசு ஆணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (MAIV) நாள்.26.7.2018ன்படி 1.4.2018 முதல் சொத்துவரி பொதுவரி சீராய்வு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் அனைத்து வரிவிதிப்புகளுக்கும் கணக்கீட்டு தாள் கணினியில் நகல் எடுப்பதற்கு 18.2.2019ம் தேதியன்று மாலை 4.00 மணிக்குள் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>1.</td><td>Sai Sri Traders</td><td>A4 size printout</td><td>Rs.1.80 per page</td></tr>
<tr><td>2.</td><td>J Print systems</td><td>A4 size printout</td><td>Rs.1.60 per page</td></tr>
<tr><td>3.</td><td>Speed Systems & Xerox</td><td>A4 size printout</td><td>Rs.1.25 per page</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.311<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>37.</td>
<td>
இந்நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட கடைகளுக்கு 9 ஆண்டுகள் முடிவடைந்த நகராட்சி கடைகளுக்கு அங்காடி மதிப்பு பொதுப்பணித்துறையிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மாதவாடகை சீராய்வு மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.15316/2016/ஆர்.3, நாள்.30.11.2016ம் தேதிய கடிதத்தின்படி, இந்நகராட்சியில் குத்தகைக்கு விடப்பட்ட அசையா சொத்துக்களான 9 ஆண்டுகள் முடிவடைந்த பட்டியலில் கண்ட கடைகளுக்கு தற்போதைய அங்காடி மதிப்பு மற்றும்
</td>
<td>தீர்மான எண்.312<br>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
</table>

பொதுப்பணித்துறையிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மதிப்பில் எது உயர்வோ அதன் அடிப்படையில் **01.04.2017** மற்றும் **01.04.2018** முதல் மாதவாடகை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.**3929/2016**/அ2, நாள்.**12.12.2016**–ந் தேதிய செயல்முறை உத்திரவின்படி அமைக்கப்பட்ட கண்காணிப்பு குழுவின் முடிவின்படி வாடகையினை மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கும்பகோணம் நகராட்சி**

**அரசு ஆணை எண்.92, நாள்.03.07.2007ன் படி ஒன்பது ஆண்டுகள் முடிவுற்ற கட்டிடக்கடைகள் 01.04.2017 மற்றும் 01.04.2018 முதல் வாடகை உயர்வு செய்ய வேண்டிய விபரம்**

| வ.எண் | வரிவிதிப்பு எண். | குத்தகைதாரர் பெயர் | குத்தகை விபரம் | 9 ஆண்டுகள் குத்தகை முடிவுற்ற காலம் | கடையின் அளவு | 31.03.2017ல் உள்ள வாடகை | பத்திர பதிவு பொதுப் பணித் துறை விகிதப்படி நிர்ணயிக் கப்படும் வாடகை | உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படும் வாடகை | அரசாணையின்படி வாடகை மறு நிர்ணயம் தற்போதைய மாத வாடகை 01.04.2017 முதல் | 01.04.2017 முதல் வாடகை உயர்வு சதவீதத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | **காந்தி பூங்கா முதல்தளக் கடைகள் MUDF** | | | | | | | | | | |
| 1 | 105–2008202 | சரவணபாரதி | கடை எண். | 09.10.2017 | 210 ச.அடி | **2024** | 6710 | 12600 | **12600** | 522 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |
| 2 | 105/200 | வி.வசந்தி | கடை எண். | 30.09.2017 | 210 ச.அடி | **1977** | 6710 | 12600 | **12600** | 537 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது |
| | **எம்எல்ஏ ஆபிஸ் எதிர்புறக் கடைகள்** | | | | | | | | | | |
| 1 | 105/198 | டி.வசந்தா | கடை எண்.14 | 19.03.2018 | 180 ச.அடி | **2050** | 1490 | 5500 | **5500** | 168 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |
| | **காந்தி பூங்கா முதல்தளக் கடைகள்** | | | | | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 105/2009215 | புஷ்பலதா | கடை எண்.30 | 10.09.2018 | 210 ச.அடி | **1788** | 6710 | 12600 | 12600 | 605 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |
| 3 | 105/2009217 | டி.எஸ்.ஜி.மாணிக்கம் | கடை எண் | 10.09.2018 | 210 ச.அடி | **2381** | 6710 | 12600 | 12600 | 429 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |
| 4 | 105/2009218 | டி.எஸ்.ஜி.மாணிக்கம் | கடை எண் | 10.09.2018 | 210 ச.அடி | **2490** | 6710 | 12600 | 12600 | 406 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |
| 5 | 105/2009216 | சி.கே.மோகன் | கடை எண்.25 | 10.09.2018 | 210 ச.அடி | **1977** | 6710 | 12600 | 12600 | 537 | அதிகபட்சமாக உள்ள உள்ளூர் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 38. | இந்நகராட்சி பகுதிகளில் விடுபட்டுள்ள கட்டிடங்களுக்கு 2017–2018ம் ஆண்டில் வரிவிதிக்கப்பட்ட வரிவிதிப்புகள் 13 அரையாண்டுகள் வரிவிதிக்கப்பட்டுள்ளது. மேற்படி முன்தேதியிட்ட வரிவிதிப்புகளின் சொத்துவரி தொகை ரூ.1,55,41,396/– பொறுமானமுள்ள வரிவிதிப்புககளை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் வாயிலாக கேட்புகள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் 2016–2017 மற்றும் 2017–2018ம் ஆண்டிற்கான இறுதி கணக்கு மற்றும் ஆரம்ப கணக்குகளில் மேற்படி தொகையானது வித்தியாசம் உள்ளதால் மேற்படி கேட்புகளை தவறான கேட்புகள் என நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. மேற்படி தொகையானது கீழ்கண்டவாறு பிரிக்கப்படுகிறது. | **தீர்மான எண்.313**<br>அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொது 14.5 % | – | **1,22,14,105** |
| கல்விவரி2.5 % | – | **21,05,880** |
| நூலக வரி 10 % | – | **12,21,411** |
| சொத்துவரி தொகை | | **1,55,41,396** |

| | | |
|---|---|---|
| 39. | இந்நகராட்சியில் 1 முதல் 45 வார்டு முடிய உள்ள சொத்துவரி, காலிமனைவரி, தண்ணீர்வரி, தொழில்வரி மற்றும் புதைசாக்கடை நிலுவை மற்றும் நடப்பு கேட்பு பதிவேடுகளை (2016–2017 மற்றும் 2017–2018) தனித்தனிப் புத்தகங்களாக பைண்டிங் செய்ய வேண்டியுள்ளதால், அதனை உள்ளூரில் உள்ள பைண்டர்களிடம் விலைப்புள்ளி பெறவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.80000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.314**<br>அனுமதி வழங்கப்பட்டது. |

<table>
<tr><td>40.</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை திட்டம் மற்றும் வரியில்லா இனங்கள் நடப்பு கேட்பு பதிவேடுகளை தனித்தனிப் புத்தகங்களாக 45 வார்டுகளுக்கும் பைண்டிங் செய்திட தனிஅலுவலர் முன் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளிகள் 11.02.2019 அன்று தருவிக்கப்பட்டது. தருவிக்கப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளிதாரர் பெயர்</th><th>ஒரு புத்தகத்திற்கு ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>ஜெயஸ்ரீ பைண்டிங் இண்டஸ்ட்ரீஸ்,<br>1360.சத்திரம் கருப்பூர்,<br>கும்பகோணம்</td><td>92/–</td></tr>
<tr><td>2.</td><td>ஆர்.சுரேஷ், உதயம் பிரிண்டர்ஸ்,<br>கும்பகோணம்</td><td>95/–</td></tr>
<tr><td>3.</td><td>மகேஷ்வரி புக் பைண்டிங் ஒர்க்ஸ்,<br>15.கர்ணகொல்லை வடக்கு,<br>கும்பகோணம்.</td><td>100/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.315<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>41.</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.40, மகாமககுளம் மேல்கரையில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பயணியர் விடுதி–யாத்ரி நிவாஸ் (Dormitary Building) கட்டிடம் குத்தகை உரிமம் மூலம் 2017–2020 வரை மூன்றாண்டுகளுக்கு தொகுப்புக்கால அடிப்படையில் நிர்வகிக்கும் உரிமம் திரு.வை.கிருஷ்ணசாமி என்பவருக்கு வழங்கியதை ஆட்சேபித்து திரு.எஸ்.செல்வராஜ் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக W.P.(MD) No.24206/2018 மற்றும் W.M.P (MD) Nos.21891 and 21892/2018 என்ற எண்ணில் தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பில் அரசு வழக்கறிஞர்களைக் கொண்டு எதிர்வழக்காட தெரிவித்து வழக்காடியதற்கு அதற்குண்டான செலவினம் ரூ.75,000/–க்கு (ரூபாய் எழுத்தைந்தாயிரம் மட்டும்) தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது</td><td>தீர்மான எண்.316<br>அனுமதி<br>வழங்கப்பட்டது.</td></tr>
</table>

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**